ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2002/42 - 2017 ජනවාරි මස 20 වැනි සිකුරාදා - 2017.01.20
2002/42 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தினை அமுலாக்குவதற்கான திகதியொன்றினை நியமித்தல்**

2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறிந்து கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தின், 2 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்சொன்ன சட்டத்தின் 01 ஆம் பந்தியின் 03 ஆவது உப பந்தியில் எனக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 1 (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்படாத ஏனைய அனைத்துப் பந்திகளின் ஏற்பாடுகள், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொது அதிகார சபைகள் தொடர்பில் 2017, பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதி முதல் அமுலாக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத் தருகின்றேன்.

கயந்த கருணாதிலக்க (பா. உ.),
பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இல. 163, கிருளப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொடை,
கொழும்பு 05.
2017, சனவரி 05.

பொது அதிகாரிகள் :

(அ) அரசாங்கத்தின் ஓர் அமைச்சு ;

(ஆ) பந்தி (உ) வில் குறித்துரைக்கப்பட்ட அந்தளவிற்கு தவிர 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டம் தவிர்ந்த அரசிலமைப்பினால் அல்லது அரசியலமைப்பின் கீழ், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது மாகாண சபையொன்றின் நியதிச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் குழு அல்லது பதவி ;

(இ) ஓர் அரசாங்கத்தின் திணைக்களம் ;

(ஈ) ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் ;

(உ) எந்தக் கம்பனியில், அரசு அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது அரசும் பகிரங்கக் கூட்டுத்தாபனமும் பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒன்றாக வைத்திருக்கின்றனவோ அல்லது வேறுவகையில் கட்டுப்படுத்துகின்ற அக்கறையைக் கொண்டுள்ளனவோ, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அந்தக் கம்பனியொன்று ;

(ஊ) ஓர் உள்ளூரதிகாரசபை ;

(எ) அரசாங்கத்திடமிருந்து அல்லது அதன் முகவராண்மையிடமிருந்து அல்லது உள்ளூர் சபையொன்றிடமிருந்து ஒப்பந்தம், பங்காண்மை உடன்படிக்கை அல்லது உரிமமொன்றின் கீழ் நியதிச் சட்ட அல்லது பகிரங்க பணி அல்லது ஒரு நியதிச்சட்ட அல்லது பகிரங்கச் சேவை நிறைவேற்றுகின்ற தனியாள் அமைப்பு அல்லது ஒழுங்கமைப்பொன்று, ஆனால் நியதிச் சட்ட அல்லது பகிரங்க பணி நியதிச் சட்ட அல்லது பகிரங்க சேவையினால் உள்ளீர்க்கப்படும் தொழிற்பாடுகளின் அந்தளவிற்கு மட்டும் ;

(ஏ) ஒரு மாகாண சபையால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் திணைக்களம் அல்லது வேறு அதிகார சபை அல்லது நிறுவனம் ;

(ஐ) நாடப்படும் தகவல் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவையுடன் தொடர்புறும் அந்தளவிற்கு பொதுமக்களுக்கு சேவையை வழங்குகின்ற அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் திணைக்களத்தினால் பொருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள் அல்லது மாகாண சபையொன்றினால் அல்லது வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட வேறு அதிகார சபை;

(ஒ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அங்கீகரிக்கப்படுகின்ற அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாண சபையின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்தொழில் நிறுவனங்கள் உள்ளடங்கலாக உயர்கல்வி நிறுவனங்கள் ;

(ஓ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கப்படுகின்ற, அல்லது உரிமமளிக்கப்படுகின்ற அல்லது அரசினால் அத்துடன் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது ஒரு மாகாண சபையின் நியதிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டமுறையான குழுவினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட வாழ்க்கைத்தொழில் அல்லது தொழில்நுட்பக் கல்வியை வழங்குகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கலாக தனியார் கல்வி நிறுவனங்கள் ;

(ஔ) நீதி நிர்வாகத்திற்கென உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட எல்லா நீதிமன்றங்கள், நியாய சபைகள் மற்றும் நிறுவனங்கள்.

*02 - 01*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.